| | |
|---|---|
| | **TAMILNADU STATE LEGAL SERVICES AUTHORITY, CHENNAI**<br><br>**DISTRICT LEGAL SERVICES AUTHORITY VILLUPURAM**<br><br>**<u>NOTIFICATION</u>** |

விழுப்புரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் சட்ட தன்னார்வலர்களாக தற்காலிகமாக பணிபுரிய நேர்முக தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் மற்றும் மூன்றாம் பாலினத்தினர் விண்ணப்பிக்கலாம். அவர்களில் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், மருத்துவர்கள், சட்டக்கல்லூரிமாணவர்கள் (வக்கீல்களாக பதிவு செய்யும் வரை), அரசு சாரா அமைப்பை சேர்ந்தவர்கள், அரசியல் அல்லாத உறுப்பினர்கள், சுற்றுப்புற குழுக்களின் பெண் உறுப்பினர்கள், சுய உதவிக்குழுக்களை சேர்ந்தவர்கள், ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் சட்ட தன்னார்வலர்களாக த.குதியானவர்கள் ஆவர்.

சட்ட தன்னார்வலர்களாக பணிபுரிய விண்ணப்பிப்பவர்கள், தங்களுடைய பெயர், முகவரி, படிப்பு மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண், சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகியவற்றை தனித்தாளில் எழுதி (அரசால் வழங்கப்பட்ட தேவையான இணைப்புகளுடன் – ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற ஆவணங்களின் நகல்களில் சுய கையொப்பமிட்ட நகல்களுடன்) தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு, விழுப்புரம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ மின்னஞ்சல் முகவரி மூலமாகவோ dlsavillupuram@gmail.com அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ வருகிற 15.05.2024 ஆம் தேதி மாலை 5 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

நேர்முக தேர்வு

சட்ட தன்னார்வலர்களாக தேர்வானவர்கள், விழுப்புரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவிலும் கள்ளக்குறிச்சி, திண்டிவனம், செஞ்சி, உளுந்தூர்பேட்டை, திருக்கோவிலூர், சங்கராபுரம், வானூர், விக்கிரவாண்டி ஆகிய நீதிமன்றங்களில் இயங்கி வரும் வட்ட சட்டப்பணிகள் குழுக்களில் பணிபுரிய வேண்டும். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு தற்காலிகமாக பணியில் அமர்த்தப்படுவார்கள். பணிபுரியும் நாட்களுக்கான மதிப்பூதியம் அளிக்கப்படும்.

நேர்முகத்தேர்வானது 28.05.2024 அன்று மாலை 03.00 மணியளவில் விழுப்புரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படி தேர்வுக்குழுவினர் மூலம் நடைபெறும் என்று விழுப்புரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் மாண்புமிகு தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி செல்வி. R. பூர்ணிமா, B.Com., L.L.M., அவர்கள் தெரிவித்துள்ளார்.

N. J. [signature] 2/5/24

செயலாளர்/முதன்மை சார்பு நீதிபதி (பொ),
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
விழுப்புரம்.

# சட்ட தன்னார்வலர்களுக்கான விண்ணப்பம்

புகைப்படம்

1. பெயர் :

2. ஆண் / பெண் :

3. தகப்பனார் / கணவர் பெயர் :

4. பிறந்த தேதி :

5. கல்வித்தகுதி :

6. கூடுதல் கல்வித்தகுதி :

7. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் :

8. நிரந்தர முகவரி :

9. விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட எந்த பிரிவில் உள்ளார் :

   1. Teachers (including retired teachers)
   2. Retired Government Servants and Senior Citizens.
   3. M.S.W Students and teachers.
   4. Anganwadi Workers.
   5. Doctors / Physicians.
   6. Students & Law Students (till they enrol as lawyers)
   7. Members of Non-Political, Service oriented NGOs and Clubs.
   8. Members of Women Neighbourhood Groups, Maithri Sanghams and others Self Help Groups including of marginalized / vulnerable groups.
   9. Educated prisoners with good behaviour, serving long term sentences in prisons.

10. இணைப்புகள் :

இடம் :

கையொப்பம்

நாள் :